பக்கங்கள்:-18

# காலை முரசு

| முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2057 | ஆனி 19 | வியாழக்கிழமை | 03.07.2025 | அதிர்வு 333 |
|---|---|---|---|---|---|

## 2 பிரபல அரசியல்வாதிகள் இரு நாள்களுக்குள் கைது?



பிரபல அரசியல் வாதிகள் இருவர், இரண்டு நாள்களுக் குள் கைது செய்யப் படுவதற்கான சாத் தியக்கூறுகள் 07







# செம்மணிப் புதைகுழியில் மேலும் 4 எலும்புக்கூடுகள்

## இதுவரை 38 மனித என்புத் தொகுதிகள் அடையாளம்

(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், செம்மணி மனி தப் புதைகுழியின் நேற்றைய அகழ் வின் போது நான்கு புதிய என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட் டுள்ளன.

செம்மணி - சித்துப்பாத்தி இந்து மயா னத்தில் அடையாளம் காணப்பட்ட மனி தப் புதைகுழி தொடர்பான இரண் டாம் கட்ட அகழ்வுப் பணிகளின் ஏழாம் நாள் அகழ்வு நேற்று இடம்பெற் றது. இதன்போது சிறுவரின் என்புத் தொகுதி எனச் சந்தேகிக்கப்படும் என்புத் தொகுதி உட்பட நான்கு புதிய என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. 06

# இலங்கைக்கு இந்தியா நிபந்தனையற்ற உதவி

## பதிலுக்கு நாம் எதையும் கேட்பதில்லை என இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவிப்பு



இந்தியாவானது இலங்கைக்கு நிபந்த னையற்ற உதவிகளையே வழங்கி வருகின் றது எனவும், செய்யும் உதவிகளுக்குப் பதிலுக்கு நாங்கள் எதையும் கேட்பதில்லை எனவும் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவித்தார்.

நம்பிக்கை மற்றும் நல்லெண்ணத்தை வளர்ப்பதிலும், இரு நாடுகளுக்கும் 06

# இரு இளைஞர்கள் கோர விபத்தில் பலி



யாழ்ப்பாணத்தில் மோட்டார் சைக்கி ளில் அதிவேகமாகப் பயணித்த இளை ஞர்கள் இருவர் மின்கம்பத்துடன் மோதுண்டு உயிரிழந்துள்ளனர். 06




யாழ்ப்பாண மாவட்ட நிர்வாக அதிகாரி களை ஒழுங்கு முறைப்படி கையாளும் போக்கு அநுரகுமார திஸநாயக்கவின் அரசின் காலத் திலேனும் மீளும் என நம்பியவர்களிற்கு இந்த அரசும் ஏமாற்றத்தை மட்டுமே பரிசளிக்கின்றது.

மாவட்டத்தில் மூத்த அதிகாரிகள் உள்ள சமயம் இளையவர்களிற்கு உயர் பதவி, இளைப்பாறுவ தற்கு ஆக மூன்று மாதங்கள் மட்டுமே சேவைக் காலம் இருக்கும்போது கட்டாய இடமாற்றம் என்பன எல்லாம் இலங்கையின் 25 மாவட்டங்களில் யாழ்ப்பாணத்திற்கு மட்டுமே உரிய சாதனைப் பட்டியல்கள். அது அநுர அரசின் காலத்திலும் நீள்கின்றது.

அந்தந்தக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் இருக்கும் அமைச்சருக்கு சாமரம் வீசும் அதிகாரி களிற்கு அல்லது அவர்கள் சிபார்சு செய்பவர்க ளிற்கு மட்டுமே உயர் பதவி என்னும் எழுதா விதி யாழ்ப்பாணத்தில் பின்பற்றப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தைக் கையாளும் அமைச்சர்கள் அல்லது அரசுப் பிரதிநிதிகள் மாறும் 06

# செம்மணியில் நேற்றைய அகழ்வுப் பணிகள்

(படங்கள்:- பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)



























# ஊடகவியலாளர் இரா. மயூதரனுக்கு ‘மக்கள் குரல்’ விருது வழங்கப்பட்டது

பிரித்தானியாவை தளமாக கொண்டு செயற்பட்டு வரும் ஐ.எல்.சி. தமிழ் வானொலியின் 15ஆவது நிறைவாண்டை முன்னிட்டு இடம்பெற்ற சிறப்பு நிகழ்வின் போது தாயக ஊடகவியலாளர் இரா.மயூதரனுக்கு “மக்கள் குரல்” விருது வழங்கிமதிப்பளிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த்தேசிய செயற்பாட்டாளர் சூசைப்பிள்ளை றூபேட்டை பிரதான செயற்பாட்டாளராக கொண்டு 2010 ஆம் ஆண்டு மே 5 ஆம் திகதி ஐ.எல்.சி. தமிழ் வானொலியை உருவாக்கி இன்றுவரை நடத்தி வருகின்றனர்.

புலம்பெயர் ஊடகப்பரப்பில் தமிழ்த்தேசியம் தொடர்பில் சமரசமின்றி கருத்தாடல், ஆய்வு நிகழ்ச்சிகளை நடத்தி புலம்பெயர் வாழ் ஈழத்தமிழர்களிடையே தமிழ்த் தோசியம் தொடர்பான விழிப்புனர்வை ஏற்படுத்தி வரும் ஐ.எல்.சி. தமிழ் வானொலி கடந்த மே 05ஆம் திகதி 15ஆவது ஆண்டு நிறைவை கொண்டாடியது.

இந்நிகழ்வின்போது மூத்த ஊடக செயற்பாட்டாளர் தாசீசியஸ் மாஸ்ரருக்கு “தமிழ் ஊடக வித்தகர்” விருது, கு.யோ. பற்றிமாகரன் மற்றும் புலவர் நல்ல தம்பி சிவநாதன் ஆகியோருக்கு “தமிழ் ஊடகத்திற்கான சேவை” விருது, போரியல் ஆய்வாளர் அருஸ் (பிரித்தானியா), அரசியல் பொருளாதார ஆய்வாளர் நேரு குணரட்ணம் (கனடா), ஊடகவியலாளர் இரா.மயூதரன் (இலங்கை) ஆகியோருக்கு “மக்கள் குரல்” விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இதேபோன்று ஐ.எல்.சி. தமிழ் வானொலியின் முதன்மை நெறியாளர் தனா ஞானி மற்றும் நிகழ்ச்சி தொகுப்பாளர்களான அமிர்தலிங்கம், றெனி, லட்சுமி, கங்கா, சிவாசிவப்பிள்ளை, பருத்தி வீரன், கிருபா, கலா ராஜன், சத்திய சீலன் ஆகியோருக்கும் “மக்கள் குரல்” விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

சிறந்த ஊடக பங்களிப்புக்கான விருது முல்லை அமுதன், முகிலினி, கனிமொழி, தாசன், ரஞ்சினி, சண் ஜோன்சன், கண்ணன், ஜோக்கிம் இருதயனந்தன், அருள் அழகையா, பேளின் சேகர், இலக்கியன், சந்துரு, குமார் தயாகரன், ரவி சங்கர், ஜெதுர்சன், பூர்வஜா, ஜனனி, லெதுஜா, அருஸ், ஸ்ரிபன், ஆனல்ட், திருவாசகம், கோகுல் தியாகராஜா, வேல்தர்மா ஆகியோருக்கு வழங்கி மதிப்பளிக்கப்பட்டிருந்தது.

இந்நிகழ்ச்சியில், தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர்கள், ஆர்வலர்கள், லண்டன் மற்றும் ஐரோப்பிய நாடுகளில் வசித்துவரும் ஐ.எல் சி. தமிழ் வானொலியின் நேயர்கள் என பலருடைய பங்கேற்பில் அரங்கம் நிறைந்த நிகழ்வாக இடம் பெற்றிருந்தது.

இதேவேளை, ஐ.எல்.சி. தமிழ் வானொலியின் தாயக செய்தியாளராக செயற்பட்டு வரும் இரா.மயூதரனுக்கு வழங்கப்பட்ட “மக்கள் குரல்“ விருதினை அவர் சார்பில் நிகழ்வு மேடையில் போரியல் ஆய்வாளர் அருஸால் பெறப்பட்டு, அமெரிக்காவில் வசித்துவரும் ஐ.எல். சி. வானொலி செயற்பாட்டாளரான விக்னேஸ்வரன் ஊடாக நேரில் வழங்கி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.













# மாலைதீவு பாதுகாப்பு ஆலோசகர் பாதுகாப்பு செயலாளருடன் சந்திப்பு

கொழும்பில் உள்ள மாலைதீவு உயர் ஸ்தானிகராலயத்தின் பாதுகாப்பு ஆலோசகர் கேர்ணல் ஹசன் அமீர், பாது காப்பு செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துயகொந்தாவை நேற்று பாது காப்பு அமைச்சில் மரியாதை நிமித் தம் சந்தித்தார்.

பாதுகாப்பு செயலாளர் கேர்ணல் அமீரை அன்புடன் வரவேற்று அவருடன் சிநேகபூர்வ கலந்துரையாடலில் ஈடுபட் டார்.

இதன்போது மேலும் இலங்கைக்கும் மாலைத்தீவுக்கும் இடையிலான பாது காப்புத்துறையில் இருதரப்பு உறவுகளை மேம்படுத்துதல் மற்றும் ஆழமான ஒத் துழைப்பை வளர்ப்பது குறித்து கலந்து ரையாடினர்.

இந்நிகழ்வில் பாதுகாப்பு அமைச்சின் இராணுவ தொடர்பு அதிகாரியும் கலந்து கொண்டார்.

பிராந்திய அமைதி, பாதுகாப்பு மற்றும் பரஸ்பர புரிதலை மேம்படுத் துவதில் இரு நாடுகளின் நீண்டகால நட்பு மற்றும் பகிரப்பட்ட ஆர்வத்தை இச்சந்திப்பு அடிக்கோடிட்டுக் காட்டுகி றது.








# குழாய் கிணறு நிர்மாணத்துக்கான வழிகாட்டல் கோவை வெளியீடு

குழாய் கிணறுகளை நிர்மாணிப்பதற் கான வழிகாட்டல் கோவை அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

கடந்த காலங்களில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் உரிய நடைமுறையை பின்பற்றாமல் குழாய் கிணறுகள் அமைக்கப்பட்டமையால் நிலத்தடி நீர் வளங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் தலைவர் ஆர்.எம்.எஸ். பண்டார இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.






# ஸ்ரீலங்கன் விமான சேவையில் இடம்பெற்ற ஊழல்களை விசாரிக்க குழு நியமிக்க அனுமதி

ஸ்ரீலங்கன் விமான சேவைகள் நிறுவனத்தில், கடந்த காலங்களில் இடம்பெற்றுள்ள ஊழல், மோசடிகள் மற்றும் முறைகேடுகளை கண்டறிவதற்காக ஜனாதிபதி விசேட விசாரணை குழுவொன்றை நியமிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

2010 - 2025 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இடம்பெற்றதாக கருதப்படும் ஊழல், மோசடிகள் மற்றும் முறைகேடுகளை கண்டறிந்து அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்காக முன்னாள் கணக்காய்வாளர் தலைமை அதிபதி எச். எம். காமினி விஜேசிங்க தலைமையிலான ஜனாதிபதி விசேட விசாரணை ஆணைக்குழுவொன்றை நியமிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதேவேளை, மேற்படி நிறுவனத்தை நடத்தி செல்வதற்கு அரசுக்கு அதிக செலவுச்சுமை நேரிட்டுள்ளமையால், ஆண்டுதோறும் ஏற்படுகின்ற அதிக நட்டத்தை தாங்கிக்கொள்ள முடியாத சூழல் உருவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதியின் செயலாளருடன் நெதர்லாந்து தூதுவர் சந்திப்பு



ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க மற்றும் இலங்கைக்கான நெதர்லாந்து தூதுவர் பொனி ஹோர்பாக் ஆகியோருக்கு இடையிலான கலந்துரையாடல் நேற்று புதன்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

தற்போது நெதர்லாந்தில் உள்ள இலங்கையின் பழங்காலப் பொருள்கள் மற்றும் ஓலைச்சுவடிகளை மீளக்கொண்டு வருவது குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டது.

இந்தப் பணியில் இலங்கை அரசாங்கம் வழங்கிய ஆதரவிற்கு தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்ட பொனி ஹோர்பாக், இரு நாடுகளுக்கும் இடையிலான கலாசார உறவுகளை வலுப்படுத்த இது ஒரு முக்கியமான வாய்ப்பாகக் கருதுவதாகவும் தெரிவித்தார்.

காலனித்துவ நாடுகளுடனான ஒத்துழைப்பை வலுப்படுத்த, நெதர்லாந்து அரசாங்கம் காலனித்துவ காலத்து கலைப்பொருள்களை உரிய நாடுகளுக்கே மீண்டும் திருப்பி வழங்குவதற்கான கொள்கை முடிவை எடுத்துள்ளது.



அதன்படி, அவர்கள் அந்தக் கலைப் பொருள்களை மீளமைப்பதற்கான ஆரம்பமாக ஒரு ஆராய்ச்சித் திட்டத்தைத் தொடங்கியுள்ளதுடன், அந்நாட்டில் உள்ள காலனித்துவ கலைப்பொருள்கள் தொடர்பில் கூட்டு ஆய்வுகளை மேற்கொள்வதற்கு இலங்கை அதிகாரிகளுடன் இணக்கம் காணப்பட்டுள்ளது.

இதன் ஆரம்பமாக, இலங்கையின் தேசிய ஆவணக் காப்பகத் திணைக்களத்தின் தலைமையில் இரு நாட்டு ஆய்வாளர்களும் நெதர்லாந்தில் உள்ள ஓலைச்சுவடி கையெழுத்துப் பிரதிகள் குறித்து ஆய்வுகளை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிகழ்வில் ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரோஷன் கமகே, கலாசார அலுவல்கள் தொடர்பான நெதர்லாந்து தூதுவரின் ஆலோசகர் கிரிஷேன் மெண்டிஸ் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

போது தங்கள் விசுவாசத்தை பச்சோந்தித் தனமாக மாற்றும் அதிகாரிகளுக்குத் தான் இங்கு காலம்.

தற்போது யாழ்ப்பாணத்தில் மேலதிக அரச அதிபர் நியமனத்திலும் இந்தப் போக்குப் பிரதிபலிக்கத் தவறவில்லை என்று கூறப்படுகின்றது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் இரு மேலதிக அரச அதிபர்கள் பதவியும் வெற்றிடம் ஏற்பட்டபோது ஓர் திறமையான அதிகாரிக்கு அந்த இடம் சிபார்சு செய்யப்பட்டது. இருப்பினும் அவரை விட மூத்த அதிகாரிகள் 7 பேர் இருக்கும் போது அவரது பெயரை சிபார்சு செய்தமை சர்ச்சையாக முன் வைக்கப்பட்டது. ஆயினும் இதில் 4 அதிகாரிகள் விசேட தரத்திற்கு உயர்வு பெற்றுச் சென்றமையால் இந்தப் பதவிக்கு தகுதியுள்ள எண்ணிகை 7 ஆக இருந்தது 3 ஆகக் குறைவடைந்தது.

மூன்றாக இருந்தபோது இரு அதிகாரிகள் அந்தப் பதவிக்கு வர விருப்பத்தை தெரிவிக்காதபோதும் 3 ஆவது இடத்தில் உள்ள தற்போதைய யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் தனது சம்மதத்தை எழுத்தில் வழங்கியிருந்தார். அந்த எழுத்து அநுர அரசால் தட்டிக் கழிக்கப்பட்டு, அமைச்சரின் விசுவாசப்பிள்ளையின் சிபார்சு மட்டுமே கருத்தில் எடுக்கப்பட்டுள்ளதாக குற்றச்சாட்டு முன் வைக்கப்படுகின்றது.

யார் அதிகாரத்துக்கு வந்தாலும் யாழ்ப்பாணத்தில் பந்தத்திற்கும், அளவுக்கு மீறிய விசுவாசத்திற்கும்தான் எப்போதும் இடம்...!


*   *   *

வடக்கில் தனியார் காணிகளை கபளீகரம் செய்யும் நோக்கோடு அரசாங்கம் கொண்டு வந்த வர்த்தமானி அறிவித்தலுக்கு எதிராக தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான சுமந்திரன் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனு நேற்று நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட இருந்தமையை அறிந்து அது பற்றிய செய்திகளை சேகரிப்பதற்காக நீதிமன்ற வட்டாரங்களோடு தொடர்பு கொள்ள முயற்சித்தேன்.

மனுதாரரானசுமந்திரன்வெளிநாட்டில். அவருக்காக வழமையாக முன்னிலையாகும் சிரேஷ்ட சட்டத்தரணி கனகேஸ்வரன் சுகவீனம் காரணமாக நேற்று நீதிமன்றுக்குச் செல்லவில்லை.

மன்றில் அச்சமயம் இருந்த பிற சட்டத்துறை வட்டாரங்களோடு தொடர்பு கொண்டு, ஊடாடி, செய்தி சேகரித்தேன். அது மாலை முரசு இதழில் நேற்று வெளிவந்து விட்டது.

அதுவல்ல விடயம். அந்தச் செய்தியை பற்றி தகவல் சொன்ன சட்ட வட்டார நண்பர் "இன்றும், இந்த வழக்கின் போன தவணையின் போதும், ஓர் அடையாள அட்டைப் படம் குறித்து நீதியரசர்கள் ஊன்றிக் கவனித்து, சிலாகித்து



பேசிக்கொண்டார்கள். அந்த அடையாள அட்டைப் படத்தை உங்கள் வட்ஸ் அப்புக்கு அனுப்புகிறேன். யார் என்று தெரிகின்றதா எனப் பாருங்கள்...!" என்றார் அந்த சட்ட வட்டார நண்பர்.

அந்தப் படத்தை பார்த்தேன். எனக்கு உடனடியாக விடயம் பிடிபடவில்லை. எங்கேயோ பார்த்த முகம் மாதிரி இருந்தது. அந்தப் படத்தை வாசகர்களுக்காக இங்கே இணைத்துள்ளேன்.

"இந்த வழக்குக்கும் இந்த அடையாள அட்டைக்கும் என்ன தொடர்பு...?" - என்று கேட்டேன்.

"இந்த வழக்கின் மனுதாரர் சுமந்திரனின் அடையாள அட்டை படம்தான் அது. அவருக்கு 18 வயதில் எடுக்கப்பட்ட அடையாள அட்டை இது..." - என்றார் அவர்.

வழக்கை விசாரிப்பதற்காக மனுவின் கோவையை நீதியரசர்கள் பிரிக்கும்போது மனுதாரரின் அடையாள அட்டை படம் முன்னுக்கு துருத்திக் கொண்டு வந்திருக்கும் போல.

கடந்த தடவை இந்த வழக்கு முன்னைய உயர்நீதிமன்ற ஆயத்தின் முன்னர் எடுக்கப்பட்டபோது மனுதாரரின் படத்தைப் பார்த்த நீதியரசர் யஸந்த கோட்டாகொட 'நல்ல அழகான இளைஞராக இருக்கிறார். நடிகர் போல தோன்றுகிறார்' என்று கருத்து கூறினார்.

அப்போது மனுதாரர் தரப்பில் ஆஜராகிய ஜனாதிபதி சட்டத்தரணி கனகேஸ்வரன் 'உங்களுக்கு நல்ல நடிகருக்கு உரிய முகவெட்டோடு தோன்றும் அவர் (இப்போது இங்கு) பலருக்கு பயங்கரவாதியாக தென்படுகிறார்' என்றார் சிலேடையாக.

நேற்று இந்த வழக்கு வேறு நீதியரசர்கள் ஆயத்தின் முன்னால் எடுக்கப்பட்ட போது, நீதியரசர் அர்ஜுனா ஒபயசேகரா மனுதாரரின் அடையாள அட்டை படத்தைப் பார்த்து தானும் சிலேடையாக கருத்துக் கூறினார்.

அச்சமயம் மனுதாரர் தரப்பில் ஆஜரான சட்டத்தரணி லட்சுமணன் ஜெயக்குமார் 'முன்னைய ஆயமும் இந்த அடையாள அட்டைப் படம் குறித்து சிலாகித்தது. இந்த நல்ல தோற்றத்திற்காகவே மனுதாரர் கைது செய்யப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை' என்றார் சிலேடையாக.

நீதியரசர்கள் உட்பட எல்லோரும் சிரித்தார்கள்.

- இப்படித் தகவல் வெளியிட்டார் அந்த சட்ட வட்டார நண்பர்.

இந்த அடிப்படை உரிமை மனு உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள் முதல், அதன் இடைக்கால உத்தரவு வெளியாகி, அந்த வழக்கு நேற்று வாபஸ் பெறப்படும் வரை உயர்நீதிமன்றத்தின் பக்கம் அந்த வழக்கு சமயத்தில் மனுதாரர் சுமந்திரன் தலை காட்டவே இல்லை. ஆயினும் தமது மனுவில் அவர் இணைத்த அவரது அடையாள அட்டையில் இருந்த அவரது படம் குறித்து நீதியரசர்கள் வரை இரண்டு ஆயங்களில் பேசப்பட்டிருக்கின்றது.

நீதிமன்றத்தில் சட்ட விவகாரங்களுக்கு - விவாதங்களுக்கு - அப்பால் அவ்வப்போது இத்தகைய ரசிகத்தக்க சுவையான உரையாடல்கள் இடம்பெறுவது வழமைதான்...!

## இரு இளைஞர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வீதியில் மாடு குறுக்கிட்டதால் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் புன்னாலைக்கட்டுவன் - சுன்னாகம் வீதியில் சுன்னாகம் பகுதியில் நேற்று புதன்கிழமை மாலை 6.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இதில், சுன்னாகம், கந்தரோடையைச் சேர்ந்த 17, 18 வயது இளைஞர்களே உயிரிழந்துள்ளனர்.

இறந்தவர்களில் ஓர் இளைஞர் இரு நாள்களுக்கு முன்னரே புதிய மோட்டார் சைக்கிளை வாங்கியிருந்தார். இந்தநிலையில், இருவரும் நேற்று புன்னாலைக்கட்டுவனுக்குச் சென்று விட்டு மீண்டும் சுன்னாகம் நோக்கித் திரும்பியுள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் இருவரும் அதிவேகமாகப் பயணித்த நிலையில் வீதியில் மாடு குறுக்கிட்டுள்ளது. வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் மாட்டை விலத்தி அவர்கள் பயணிக்க முயன்ற நிலையில் வீதிக் கரையில் இருந்த மின்கம்பத்துடன் மோட்டார் சைக்கிள் மோதியுள்ளது.

இதில், இருவரும் தூக்கி வீசப்பட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

விபத்துக் குறித்து சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## செம்மணிப் புதை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செம்மணி மனிதப் புதைகுழியில் இதுவரை 38 என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் 30 மனன்புத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. ஒன்றோறு ஒன்று கலந்து குழப்பகரமான நிலையில் காணப்படும் 4 மனித எச்சங்களும் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. இன்று எட்டாம் நாள் அகழ்வுப் பணிகள் இடம்பெறவுள்ளன.

யாழ். நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜாவின் கண்காணிப்பில், துறைசார் நிபுணரும் பேராசிரியருமான சோமதேவாவின் தலைமையில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

காணாமல் ஆக்கப்பட்டோர் ஆணைக் குழுவின் சட்டத்தரணி பூரணி மரியநாயகம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பான சட்டத்தரணிகளான ஞா.ரனித்தா மற்றும் வி.கே.நிரஞ்சன், சட்ட மருத்துவ அதிகாரி பிரணவன் சல்லையா தலைமையிலான குழுவினரும் அகழ்வுப் பணிகளின் போது முன்னிலையாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பரஸ்பர நன்மை பயக்கும் நீடித்த உறவுகளை உருவாக்குவதிலும் இலங்கையின் உதவி மட்டுமே எங்களுக்குத் தேவையாகும் எனவும் அவர் கூறினார்.

இலங்கை வந்துள்ள இந்திய பெருநிறுவனங்களின் பிரதம நிறைவேற்று அதிகாரிகளுக்கான வரவேற்பு நிகழ்வு கொழும்பு ஐ.டி.சி. ரத்னதீப ஹோட்டலில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்காண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாங்கள் இலங்கைக்கு மிக ஆழமாக அர்ப்பணிப்புடன் இருக்கின்றோம் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். கடந்த 13 அல்லது 14 ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது கடந்த மூன்று ஆண்டுகளில் இரண்டு மடங்குக்கும் அதிகமாக உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

2022இல் நாங்கள் இலங்கைக்கு வழங்கிய அவசரகால உதவியின்போது வழங்கப்பட்ட கடன்களுக்கான மறுசீரமைப்பு இம்பெற்றுள்ளது. இதன் மூலம் இந்தியா இலங்கையின் மிகவும் நம்பகமான நண்பராகவும், மிகவும் நம்பத்தகுந்த பங்காளியாகவும் உள்ளது என்பதைத் தெரிவிக்கிறோம்.

இந்த நன்மைகள் இலங்கைக்கு அதிகமாக இருந்தாலும் நாங்கள் பொருட்படுத்தமாட்டோம், ஏனென்றால் இலங்கை எமது சகோதர நாடு, இன்று நாம் இதுவரை கண்டிராத மிகச் சிறந்த உறவைக் கொண்டிருக்கின்றோம்." - என்றார்.

# டெங்கு நுளம்பு பெருகக் கூடிய 10,591 இடங்கள் அடையாளம்

தேசிய டெங்கு ஒழிப்பு வாரத்தின் முதல் 2 நாள்களில் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போது நுளம்பு பெருகக்கூடிய 10,591 இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன என சுகாதார அமைச்சு தெரிவித்தது.

கடந்த 2 நாள்களில் மாத்திரம் 48,354 இடங்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன என தேசிய டெங்கு ஒழிப்புப்பிரிவின் சமூக வைத்திய நிபுணர் ப்ரஷீலா சமரவீர தெரிவித்துள்ளார்.

தேசிய டெங்கு ஒழிப்பு வாரத்தின் 3 ஆம் நாளுக்கான சோதனை நடவடிக்கைகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன.

கடந்த சில மாதங்களாக பெய்த கடும் மழை காரணமாக டெங்கு மற்றும் சிக்குன் குன்யா நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டது.

இதனை கட்டுப்படுத்தும் நோக்கில் 16 மாவட்டங்களை உள்ளடக்கிய வகையில் கடந்த 30ஆம் திகதி முதல் எதிர்வரும் 05ஆம் திகதி வரை விசேட டெங்கு ஒழிப்பு வாரம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இதற்காக 1,100 குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

இதனிடையே சோதனை செய்யப்பட்ட ஒவ்வொரு 5 வளாகங்களில் ஒரு வளாகம் நுளம்பு பெருக்கத்திற்கான உகந்த நிலையைக் கொண்டிருந்ததாக தேசிய டெங்கு ஒழிப்புப்பிரிவின் சமூக வைத்திய நிபுணர் ப்ரஷீலா சமரவீர தெரிவித்துள்ளார்.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 28,752 டெங்கு நோயாளர்கள் நாடு முழுவதும் பதிவாகியுள்ளனர்.

அதில் அதிக நோயாளர்கள் மேல் மாகாணத்திலேயே பதிவாகியுள்ளனர்.

# இலங்கையர் மலேசியாவிற்கு வீசா இல்லாமல் பயணிக்கலாம்



இரு நாடுகளுக்கும் இடையிலான சுற்றுலா உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில், இலங்கையர்களுக்கு விசா இல்லாத பயணத்தை அனுமதிப்பது தொடர்பில் மலேசியா பரிசீலித்து வருகிறது.

மலேசிய அரசாங்கத்திடம், ஏற்கனவே இதற்கான திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக, புத்ரஜயாவில் உள்ள இலங்கைத் தூதுக்குழுவிடம், மலேசியா சுற்றுலா ஊக்குவிப்பு சபையின் ஆசிய மற்றும் ஆபிரிக்காவிற்கான சிரேஷ்ட பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்தக் குழுவில் ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் மற்றும் இலங்கை ஊடகங்களின் பிரதிநிதிகள் அடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2024 ஆண்டு மலேசியாவுக்கு, இலங்கையர்களின் வருகை 122 சதவீதத்தால் அதிகரித்ததைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தமது நாட்டுக்கு, இலங்கையிலிருந்து சுற்றுலாப் பயணிகளின் வருகையை மேலும் அதிகரிப்பதும் இந்த முயற்சியின் நோக்கமாகும் என மலேசிய சுற்றுலா ஊக்குவிப்பு சபையின் ஆசிய மற்றும் ஆபிரிக்காவிற்கான சிரேஷ்ட பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

## 2 பிரபல அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இருக்கின்றன எனப் பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன என்று கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடந்த அரசில் அமைச்சர்களாக இருந்து அதிர்ச்சியான நடவடிக்கைகளில் ஈடுபட்ட இருவர் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் கிடைத்த சாட்சியங்களின் அடிப்படையில் இவ்விருவரும் கைது செய்யப்படவுள்ளனர் என்றும் அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு அதிகாரிகளால் இவ்விருவரும் கைது செய்யப்படவுள்ளனர் என்றும், இலஞ்சம் ஊழல் பற்றி இவ்விருவருக்கும் எதிராகவும் கடுமையான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன என்றும் அந்தத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில் கிரிந்த மீன்வளத் துறைமுகத்தில் மணல் அகழ்வுத் திட்டத்தை முறையான கொள்முதல் நடைமுறைகளைப் பின்பற்றாமல் கொரிய நிறுவனத்துக்கு வழங்கியமை மூலம் அரசுக்கு நிதி இழப்பு ஏற்படுத்தினார் எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ள முன்னாள் மீன்வள அமைச்சர் ராஜித சேனாரத்ன, து தொடர்பான விசாரணைக்கு உடல்நலக் குறைவு காரணமாக ஆஜராக முடியாது என்று நேற்று இலஞ்ச ஒழிப்பு ஆணையத்திடம் தெரிவித்துள்ளார்.

ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பாக வாக்குமூலம் அளிக்க இலஞ்ச ஒழிப்பு ஆணையத்தின் விசேட புலனாய்வுப் பிரிவு, முன்னாள் அமைச்சரை நேற்றுக் காலை 9 மணிக்கு ஆஜராகுமாறு அழைத்திருந்தது. இருப்பினும், இலஞ்ச ஒழிப்பு ஆணைய வட்டாரங்களின்படி, சேனாரத்னவின் வழக்கறிஞர் நேற்றுமுன்தினம் காலை அவர் சார்பாக ஆஜராகி, தனது கட்சிக்காரர் மருத்துவ நிலை காரணமாக ஆஜராக முடியவில்லை என்று கூறி ஒரு கடிதத்தைச் சமர்ப்பித்தார்.

இந்த வழக்கு தொடர்பாக ராஜித சேனாரத்னவைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த அனுமதி கோரி இலஞ்ச ஒழிப்பு ஆணையம் முன்னதாக கொழும்பு தலைமை நீதிவான் தனுஜா லக்மாலி ஜெயதுங்கவிடம் சாட்சியங்களைச் சமர்ப்பித்திருந்தது.

# வவுனியாவில் காணி கோரிய 2,000 குடும்பங்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு துரிதமாக நடவடிக்கை

## பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க கூறுகின்றார்




**(கி.வசந்தன்)**

வவுனியாவில் 2,000 குடும்பங்கள் காணி கோரி விண்ணப்பித்துள்ள நிலையில் அதனை தீர்க்க துரித நடவடிக்கை எடுக்கப்படும் கூட்டுறவு பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க தெரிவித்துள்ளார்.

வவுனியா பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் –

இலங்கையின் ஏனைய மாகாணங்களை விட வட மாகாணத்தில்தான் காணிப் பிரச்சினைகள் அதிகமாக உள்ளது. அதில் 25 வீதம் கூட தீர்க்கப்படவில்லை. பலர் வெளிநாடுகளில் வாசிப்பதும் துரிதமாக தீர்க்க முடியாமைக்குக் காரணம் ஆகும்.

அடுத்த வருடம் 80 வீதமான காணிப் பிரச்சுனைகளைத் தீர்க்க முடியும். அதற்கான சிறப்பு வேலைத்திட்டம் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வனவளத் திணைக்களத்தால் எல்லை இடும் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளன. வவுனியாவில் 25,000 ஏக்கர் காணிகள் விரைவில் விடுவிக்கப்படும். வன்னியில் முழுமையாக 50,000 ஏக்கர் காணிகள் விடுவிக்கப் படவுள்ளன. அதற்கான விசேட குழு அமைக்கப்பட்டு உள்ளது.

வனவளத் திணைக்களம், பிரதேச செயலகம், காணி அமைச்சு இணைந்து இந்த நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளார்கள்.

இது தொடர்பாக பயப்பட தேவையில்லை. மக்களுக்கு காணிகள் வழங்கப்படும். பிரதேச செயலாளர் ஊடாக காணி கோரிய 2000 குடும்பங்களுக்கு காணி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

“உறுமய“ மீளாய்வு செய்யப்படுகிறது. அதனை சரியாக கையாண்டு மக்களுக்கு காணி உரிமத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. – எனத் தெரிவித்தார்.

# வவுனியாவில் திறக்கப்பட்ட மசாஜ் நிலையத்தை அதிரடியாக உடனே மூட வைத்த மாநகர சபை











**(கி.வசந்தன்)**

வவுனியா, தேக்கவத்தை பகுதியில் அனுமதியின்றி திறக்கப்பட்ட மசாஜ் நிலையம் மாநகர சபையால் இரவிரவாக அகற்றப்பட்டது

வவுனியா, தேக்கவத்தை, 15 ஆம் ஒழுங்கையில் மசாஜ் நிலையம் ஒன்று நேற்று மாலை திறக்கப்பட்டது. பெயர் பலகை பிரதான வீதியிலும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் பொது மக்கள் விசனம் தெரிவித்து இருந்தனர்.

இச்சமபவம் தொடர்பில் தொலைபேசியில் மாநகர சபைக்கும் சமூக ஆர்வலர்களால் தெரியப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து குறித்த இடத்திற்குச் சென்ற மாநகர சபை மேயர் சு.காண்டீபன், பிரதி மேயர் ப.கார்த்தீபன், பொது சுகாதார பரிசோதகர் உள்ளிட்ட குழுவினர் மசாஜ் நிலையம் என்னும் பெயரில் நிறுவப்பட்ட பெயர் பலகைகளை அகற்றியமையுடன், மாநகர சபையின் அனுமதியின்றி அப்படித் திறக்க முடியாது எனவும் அறிவுறுத்தினர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## துணிந்து செயற்படுக!

நாட்டில் சட்டத்தின் ஆட்சி என்ற பெயரில் ஒரு கொடூரமான - குரூரமான - மிகவும் மோசமான - மிருகத்தனமான - காட்டுமிராண்டித்தனமான - மனித நாகரிக மேன்மைக்கே ஒவ்வாத - ஒரு விவகாரம் தொடர்கின்றது என்றால், அது கடந்த 47 ஆண்டுகளாக இலங்கையில் நீடிக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டம் தான்.

சட்டத்தின் பெயரால் அரச பயங்கரவாதம் கோலோச்சுவதை காண்கிறோம்.

அதேபோல, கற்றிந்த - படித்த - கல்வி சமூகத்தின் மத்தியில் மிக மோசமான, மோட்டுத்தனமான, முட்டாள்தனமான ஒரு செயற்பாடு தொடர்கின்றது என்றால் அது பகிடிவதை (ராகிங்) கொடூரம்தான்.

படித்த சமூகத்திற்கு முற்றிலும் பொருத்தம் இல்லாத காட்டுமிராண்டித்தனம் அது.

அதனை ஒழிப்பது குறித்து ஒவ்வொரு அரசும் பேசுகிறது. ஆனால் அதனை - அந்தக் கொடூரத்தை - ஒழிப்பதில் அரசுகள் தீவிரம் காட்டவேயில்லை.

இருக்கின்ற பயங்கரவாதச் சட்டம் போன்ற, குற்றம் இழைத்தவர் என கருதப்படுவோரின் குற்ற ஒப்புதல் வாக்குமூலங்களை, கேட்டுக்கேள்வியின்றி அவர்களுக்கு எதிரான சான்றாதாரமாகப் பயன்படுத்தும் சட்ட முறைமைகளைக் கொண்டு வந்தாவது இந்த ராகிங்சீரழிவை அடியோடு ஒட்ட நறுக்க வேண்டும். தேவையானால்ராகிங்கையே ஒரு பயங்கரவாதச் செயலாகப் பிரகடனப்படுத்தி அதை அடியோடு ஒழிக்கக் கங்கணம் கட்டிச் செயற்பட வேண்டும்.

அந்த அளவுக்கு கற்றறிந்த சமூகத்தின் மத்தியில் சமுதாய நாசக்கார சக்தியாக ராகிங் கொடூரம் பேயுருக் கொண்டு நிற்கின்றது.

பல்கலைக்கழக அமைப்பு மற்றும் பிற உயர்கல்வி நிறுவனங்களுக்குள் பகிடிவதை, துன்புறுத்தல் மற்றும் அனைத்து வகையான வன்முறைகளையும் ஒழிப்பதற்கான விரிவான பரிந்துரைகள் மற்றும் நடவடிக்கைகளை வகுக்குமாறு கல்வி அமைச்சரான பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய அழைப்பு விடுத்துள்ளார்.

கல்வி நிறுவனங்களில் பகிடிவதை மற்றும் பிற வகையான வன்முறைகளைத் தடை செய்வதற்கான தேசிய பணிக்குழு உறுப்பினர்களுடன் நேற்றுக் கல்வி அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே பிரதமர் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார்.

மூன்று ஆண்டு காலத்திற்கு நியமிக்கப்பட்ட பணிக்குழு, பல்கலைக்கழகங்கள் மற்றும் பிற உயர்கல்வி அமைப்புகளில் மாணவர்கள், கல்வி மற்றும் கல்விசாரா ஊழியர்களால் நிகழ்த்தப்படும் வன்முறை சம்பவங்களை விசாரித்து நடவடிக்கை எடுக்கத் தேவையான அதிகாரங்களைக் கொண்டிருக்கும் என்றும், முழு அரசின் ஆதரவைப் பெறும் என்றும் அவர் கூறினார்.

இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க குறுகிய மற்றும் நீண்ட கால நடவடிக்கைகளை செயல்படுத்துவதன் முக்கியத்துவத்தை பிரதமர் சுட்டிக்காட்டினார். சட்ட நடவடிக்கை மட்டும் போதாது என்றும், புதிய வழிமுறைகளை உருவாக்குதல், ஏற்கனவே உள்ள சட்டங்களில் புதுப்பிப்புகள் மற்றும் பாதுகாப்பான, அதிக ஆதரவான கல்விச் சூழலை வளர்ப்பதற்கான அணுகுமுறை மேம்பாட்டுத் திட்டங்களை அறிமுகப்படுத்துதல் ஆகியவற்றுக்கும் அவர் அழைப்பு விடுத்தார்.

அரச மட்டத்தில் கிடைத்திருக்கும் இந்த முழு அளவிலான ஆதரவை - பற்றுறுதியை - வலிமையாகப் பற்றிக் கொண்டு, உயர்கல்வித் துறையையே சீரழிக்கும் இந்தக் குரூரப் பிசாசை அடியோடு ஒழிக்கக் காத்திரமான - உறுதியான - கடுமையான - நடவடிக்கைகளை துணிந்து எடுப்பதற்கு சம்பந்தப்பட்ட பணிக்குழு முன்வர வேண்டும்.



# சர்வதேச யோகாவில் பங்கேற்றோருக்கு சான்றிதழ்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு!

(அபு அலா)

சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு, ஆயுள்வேத திணைக்களம் மற்றும் இந்தியத் தூதரகம் இணைந்து நடத்திய சர்வதேச யோகா தின நிகழ்வில் பங்கேற்றவர்களுக்கு சான்றிதழ் வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று (01) கோபாலபுரம் மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலையில் இடம்பெற்றது.

கோபாலபுரம் மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் என்.நிரஞ்சன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வைத்தியர்கள், பயிற்சி வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் ஆகியோர்களுக்கான சான்றிதழ்களை வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் என்.நிரஞ்சன் வழங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில், வைத்திய கலாநிதி பொல்ரன் றஜீவ், வைத்தியர்களான திருமதி வை.ராமநாதன், எம்.ஏ.சி. பி.நிலுபா ஆகியோர் கலந்துகொண்டனர்.





# டிஜிட்டல் அடையாள அட்டைகளை தயாரிக்க இந்திய நிறுவனங்களிடம் விலைமனு கோரல்

புதிய டிஜிட்டல் அடையாள அட்டைகளை தயாரிப்பதற்காக இந்திய நிறுவனங்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளதாக டிஜிட்டல் பொருளாதார அலுவல்கள் அமைச்சு தெரிவித்தது.

இதற்காக 4 மாதங்கள் வழங்கப்பட்டுள்ளதாக பிரதியமைச்சர் எரங்க வீரரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த திட்டத்திற்காக 10.4 பில்லியன் ரூபா நிதி இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

அடுத்த வருட நடுப்பகுதியில் புதிய டிஜிட்டல் அடையாள அட்டைகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பிரதியமைச்சர் எரங்க வீரரத்ன தெரிவித்துள்ளார்.







# பல மோசமான செயல்களுடன் பிள்ளையானுக்குத் தொடர்பாம்

## அரசுத் தரப்பு எம்.பியான கந்தசாமி பிரபு கூறுகின்றார்





(கனகராசா சரவணன்)

பிள்ளையான் போன்றவர்கள் இந்த நாட்டிலே இடம்பெற்ற பல மோசமான செயல்களில் சம்பந்தப்பட்டிருக்கின்றனர்என்றஅடிப்படையில்இன்றுவிசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றன. எனவே அவை தொடர்பில் உரிய தீர்மானம் சட்டரீதியாக மேற்கொள்ளப்படும் என தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை பழைய கச்சேரி மண்டபத்தில் அபிவிருத்திக் குழுத் தலைவரும் அமைச்சருமான சுனில் ஹந்துன்நெத்தி தலைமையில் இடம்பெற்றது.

இதில் போக்குவரத்து பெருந்தெருக்கள், துறைமுகம் மற்றும் விமான போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்னாயக்கா, கிழக்கு மாகாண ஆளுநர் ஜெயந்தலால், நாடாளுமன்ற உறுப்பினர்களான பிரபு, ஏ.எல்.எம்.ஹிஸ்புல்லா, வைத்தியர் இ.சிறிநாத், இரா.சாணக்கியன் மற்றும் அரசாங்க அதிபர் திருமதி ஜே.ஜே. முரளீதரன் மற்றும் திணைக்கள அதிகாரிகள், பிரதேசசபைத் தவிசாளர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது அபிவிருத்திக் குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் க. பிரபு. அச்சமயம் மேற்கண்டவாறு தெரிவித்தார்

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் என்ற வகையில் நாட்டில் அபிவிருத்தி செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றோம். அதனடிப்படையில் மட்டக்களப்பில் பெருந்தெருக்க மற்றும் போக்குவரத்து விமான போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்காவின் அமைச்சின் கீழ் உள்ள திணைக்களங்களில் உள்ள அபிவிருத்தி தொடர்பாகவும் பல திட்டங்களை அமுல்படுத்துவது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தால் எந்தவோரு செயற்பாடுகளையும் செயல்படுத்த முடியாது எனக் கூக்குரல் இட்டு திரிந்த எதிர்கட்சியினர் இன்று அடங்கி போய் இருக்கின்றனர்.

இன்று சிறுபோக வேளாண்மை அறுவடை செய்யப்பட்டு வருகின்றது. கடந்த காலங்களில் நெல்லுக்கான நிர்ணய விலையை நிர்மானிப்பதற்கு கூட முடியாத கடந்த கால அரசாங்கம் இருந்தது. ஆனால் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நாட்டை பெறுப்பேற்ற பின்னர் நெல்லுக்கான நிர்ணய விலையை 120 ரூபாவாக அதிகரித்துள்ளதுடன் அதனை கொள்வனவு செய்வதற்காக 6 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளோம்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பாக நீதி அமைச்சர் கலந்து ஆலோசித்து வருகின்றார். அதனை திருத்துவது தொடர்பாக சட்டத்தரணிகள், சமூக அமைப்புக்கள், மனித உரிமை அமைப்புக்களுடன் கடந்த வாரம் கலந்துரையாடியுள்ளார். அதனை மறுசீரமைக்க கலந்தாலோசித்து ள்ளோம்.

பிள்ளையான் போன்றவர்கள் இந்த நாட்டிலே பல மோசமான செயல்களில் சம்பந்தப்பட்டிருப்பதாக இன்று விசாரணைகள் மோற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதற்கான விசாரணையில் எந்த முடிவு வருகின்றதே அந்தடிப்படையில் தீர்மானம் மேற்கொள்ளப்படும். அது சட்டரீதியாக இடம்பெறும்.

தேசிய மக்கள் சக்தி மக்களின் நலன் சார்ந்த பணியை முன்னெடுத்துவரும் அரசாங்கம் மக்களின் ஆதரவுடன் நீடித்து பயணிக்கும் என எதிர்கட்சியினருக்கு நாங்கள் சவால் விடுகின்றோம். – என்றார்.

# ஓமந்தையில் காணி அபகரிக்கும் பொலிஸின் முயற்சி தடுத்து நிறுத்தியது பிரதேச ஒருங்கிணைப்புக் குழு!



(கி.வசந்தன்)

ஓமந்தை பொலிஸ் நிலையத்திற்கு அருகில் தனிநபர் ஒருவரின் காணியைப் பொலிஸார் கையகப்படுத்த எடுத்த நடவடிக்கை பிரதேச ஒருங்கிணைப்பு குழுவால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்திய லிங்கம் தெரிவித்துள்ளார்.

ஓமந்தையில் இடம்பெற்ற இவ்விடயம் தொடர்பில், நேற்றைய தினம் இடம்பெற்ற வவுனியா பிரதேச அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் பொலிஸார் மற்றும் அபிவிருத்திக்குழு தலைவரிடம் கேள்வியெழுப்பினார். இதன்போதே இத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக அவ தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஏ9 வீதியில் ஓமந்தை பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையில் இக்காணி அமைந்துள்ளது. அந்தக் காணியை திங்கட்கிழமை துப்புரவு செய்துள்ளனர்.

குறித்த காணி நீண்ட காலமாக ஒருவரின் பராமரிப்பில் இருந்த போதிலும் அவருக்கான காணி ஆவணங்கள் இல்லாத நிலையில் தற்போதும் அது அரச காணியாக காணப்பட்டு வருகின்றது. எனினும் குறித்த காணிக்கு சொந்தம் கோரும் நபர் இக்காணி தனக்குரியதானது என பிரதேச செயலாளர் மற்றும் மாவட்ட அரசாங்க அதிபரிடம் முறைப்பாடு செய்த நிலையில் இதுவரை அவருக்கு காணிக்கான ஆவணங்கள் கொடுக்கப்படாத நிலையிலேயே பொலிஸார் காணியைத் துப்பரவு செய்துள்ளனர்.

அத்துடன், தற்போது பொலிஸ் நிலையம் அமைந்துள்ள காணியும் பல நோக்கு கூட்டுறவு சங்கத்திற்கு சொந்தமான காணியாகும். அதற்கு பதிலாக ஓமந்தை கமநல சேவை நிலையத்திற்கு பின்பாக பொலிஸ் நிலையத்திற்கென ஏற்கனவே காணி ஒதுக்கப்பட்டுள்ளது.

தற்போதுள்ள காணியில் இருந்து பொலிஸெ இன்னும் வெளியேறாத நிலையில் புதிதாக இன்னுமொரு காணியையும் அடாத்தாக கையகப்படுத்தும் நடவடிக்கையை அனுமதிக்க முடியாது. - எனவும் தெரிவித்தார்.

இதனையடுத்து பொலிஸாருடன் இடம்பெற்ற நீண்ட வாதப்பிரதிவாதங்களின் பின் காணி கையகப்படுத்தப் படும் செயற்பாட்டை உடனடியாக நிறுத்துமாறு பிரதேச ஒருங்கினைப்புக் குழுவால் பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் மேலதிக நடவடிக்கைகள் தொடர்பில் களஆய்வொன்றினை அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர் தலைமையில் மேற்கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது எனத் தெரிவித்தார்.




# சாவகச்சேரியில் அம்மாச்சி உணவகம் நகரசபையின் முதல் கூட்டத்தில் முடிவு

(த.சுபேசன்)

நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனாவின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடு மற்றும் சாவகச்சேரி நகரசபையின் நிதி ஆகியன மூலம் சாவகச்சேரி நகரசபைக்கு உரித்தான மடத்தடிப் பகுதியில் உள்ள காணியில் அம்மாச்சி உணவகம் அமைக்க நகரசபையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை நகரசபையில் இடம்பெற்ற கன்னி அமர்வின் போதே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தென்மராட்சிப் பிரதேச செயலகம் ஊடாக சாவகச்சேரி நகரசபைக்கு கிடைக்கப்பெற்ற அர்ச்சுனா எம்.பியின் 3.2மில்லியன் ரூபா நிதி மற்றும் சாவ-கச்சேரி நகரசபையின் 2.8மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடுகள் மூலம் மடத்தடிப் பகுதியில் அம்மாச்சி உணவகத்தை அமைக்க சபையில் முடிவெடுக்கப் பட்டுள்ளது.

மேற்படி உணவகத்தை சாவகச்சேரி நகரசபைக்கு உரித்தான நுணாவில் சிறுவர் பூங்கா காணியில் அமைக்க தவிசாளர் விருப்பம் தெரிவித்த போதிலும் ஒரு சில சபை உறுப்பினர்கள் அதனால் சிறுவர் பூங்காவின் தனித்துவம் பாதிப்படையும் எனச் சுட்டிக்காட்டப்பட்ட நிலையில் மடத்தடிப் பகுதியில் அமைப்பதென முடிவெடுக்கப்பட்டது.

இந்த அம்மாச்சி உணவகம் ஊடாக பெண் தலைமைக் குடும்பங்களுக்கு தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க முடியும் எனவும் தவிசாளர் ஸ்ரீபிரகாஷ் தெரிவித்திருந்தார்.





# மடுவில் நேற்று சிறப்பாக இடம்பெற்ற மருதமடு அன்னையின் ஆடித் திருவிழா

## இலட்சக்கணக்கானோர் பங்கேற்பு

**(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னார் மடு மாதா திருத்தலத்தின் ஆடி மாதத் திருவிழா நேற்று மிகச் சிறப்பாக லட்சக்கணக்கான பக்தர்கள் பங்கேற்புடன் நடைபெற்றது.

நேற்றுப் புதன்கிழமை காலை 6.15 மணி அளவில் மன்னார் மறைமாவட்டஆயர்அந்தோனிப்பிள்ளைஞானப் பிரகாசம் ஆண்டகை தலைமையில், மன்னார் மறைமாவட்ட ஓய்வு நிலை ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை, குருநாகல் மறைமாவட்ட ஆயர் அந்தோணி பெரேரா ஆண்டகை, மடு ஆலயப் பரிபாலகர் அருட்தந்தை பெப்பி சோசை அடிகளார், மன்னார் மறை மாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை கிறிஸ்து நேசன் அடிகளார் ஆகியோர் இணைந்து திருவிழா திருப்பலியை கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுத்தனர்.

திருவிழா திருப்பலியை தொடர்ந்து மடு அன்னையின் திருச்சொரூப பவனி இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து மடு அன்னையின் ஆசீர்வாதம் பக்தர்களுக்கு வழங்கப்பட்டது.

திருவிழா திருப்பலியில் அருட் தந்தையர்கள், அருட் சகோதரர்கள், திணைக்கள தலைவர்கள் உள்ளடங்கலாக லட்சக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

கடந்த ஜுன் மாதம் 23ஆம் திகதி கொடியேற்றத்தை தொடர்ந்து நவநாள் ஆராதனை திருப்பலிகள் இடம்பெற்று நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை வேஸ்பர்ஸ் ஆராதனை இடம் பெற்ற நிலையில் நேற்றைய தினம் திருவிழாத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.














# காரைதீவு காளியம்மாள் ஆலய மகா கும்பாபிஷேகம்



கிழக்கிலங்கை காரைதீவு அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலய புனராவர்த்தன அஷ்ட பந்தன பஞ்சகுண்ட பக்ஷ பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேக குடமுழுக்கு பெருஞ்சாந்தி பெருவிழாவின் நேற்று புதன்கிழமை கோலாகலமாக நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.









# அஜித்குமார் உயிரிழப்புக்கு நீதி கேட்டு திருப்புவனத்தில் அ.தி.மு.க ஆர்ப்பாட்டம்

சிவகங்கை மாவட்டம், மடப்புரம் கோயில் காவலாளி அஜித்குமார் மரணத்துக்கு நீதி கேட்டு திருப்புவனம் சந்தைபேட்டை அருகே அ.தி.மு.க. சார்பில் நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த விவகாரத்தில், "யார் தனிப்படை விசாரணைக்கு உத்தரவிட்டது?" என அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் கேள்வி எழுப்பினார்.

அ.தி.மு.க. மாவட்டச் செயலாளர் செந்தில்நாதன் எம்.எல்.ஏ. தலைமை வகித்த இந்த ஆர்ப்பாட்டத்தில், காவலாளி அஜித்குமாரின் மரணத்துக்கு நீதி கேட்டு, தமிழக அரசு, பொலிஸ்க்கு எதிராக கண்டன முழக்கங்கள் எழுப்பப்பட்டன. பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவித்த அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார்,

"தி.மு.க. பிரமுகர் காரில் பாதிக்கப்பட்ட குடும்பத்தை ஏற்றிச் செல்ல யார் அதிகாரம் கொடுத்தது?

இதை கண்டித்து அன்றைய தினம் அ.தி.மு.கவினர் போராட்டம் நடத்தினர். அஜித்குமாரின் தாய் நீதி கேட்கிறார். நீதி கேட்பது தேசக் குற்றமா? மாவட்டக் கண்காணிப்பாளர் ஏன் காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றப்பட்டுள்ளார்? உண்மை நிலவரம் முதல்வருக்கு தெரிந்துவிட்டது. அதனால் மாவட்ட பொலிஸ் கண்காணிப்பாளரை பணியிடை நீக்கம் செய்ய வேண்டும். தனிப்படைக்கு யார் உத்தரவிட்டது? யார் அழுத்தம் கொடுத்தது? காவல் நிலையத்தில் புகார் கொடுத்தால், அதுகுறித்து விசாரணை அதிகாரி விசாரிக்க வேண்டும்.

இதேபோல் பொலிஸ் நிலையங்களுக்கு வரும் அனைத்து புகார்களையும், ஸ்டாலினின் கட்டுப்பாட்டில் உள்ள உள்துறையின் தனிப்படை, சிறப்பு படை விசாரிக்குமா? சாத்தான்குளம் சம்பவம் நடந்தபோது, அரசுதான் பொறுப்பேற்கவேண்டும். முதல்வர்தான் பொறுப்பு என்று சொன்னது அப்போதைய எதிர்க்கட்சித் தலைவராக இருந்த மு.க.ஸ்டாலின். அவர் கூறியபடியே இச்சம்பவத்துக்கும் முதல்வர் பொறுப்பேற்க வேண்டும். அதைத்தான் மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

இந்த விவகாரத்தில் தொடர்ந்து நீதி கேட்டு அறவழி போராட்டத்தையும், சட்டப் போராட்டத்தையும் அ.தி.மு.க. நடத்தும். விளம்பரம் தேடுவது அ.தி.மு.கவின் வேலையில்லை. பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு தேவையான உதவிகளை அதிமுக செய்யும்." என்று தெரிவித்துள்ளார்.

## அஜித்குமார் வழக்கு:

# உயர் நீதிமன்றம் நியமித்த மாவட்ட நீதிபதி திருப்புவனத்தில் விசாரணை நடத்தினார்





பொலிஸ் விசாரணையில் கொல்லப்பட்ட அஜித்குமார் தொடர்பான வழக்கு குறித்து விசாரிக்க உயர் நீதிமன்றம் நியமித்த மாவட்ட நீதிபதி திருப்புவனத்தில் விசாரணை நடத்தியுள்ளார்.

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் அருகே மடப்புரம் கோயில் காவலாளி அஜித்குமார் தனிப்படை பொலிஸார் கொடூரமாக தாக்கியதில் உயிரிழந்தார். இந்த வழக்கை நேற்று முன்தினம் உயர் நீதிமன்றம் மதுரை கிளை விசாரித்தது.

அப்போது உயர் நீதிமன்ற நீதிபதிகள் பொலிஸாரிடமும், அரசிடமும் சரமாரியாக பல்வேறு கேள்விகளை முன்வைத்தனர்.

மேலும் இந்த வழக்கு குறித்து மதுரை மாவட்ட நீதிபதி ஜான்சுந்தர்லால் சுரேஷ் விசாரணை செய்ய உத்தரவிட்டனர். இந்நிலையில் நேற்று திருப்புவனத்தில் மாவட்ட நீதிபதி ஜான்சுந்தர்லால் சுரேஷ் விசாரணை செய்து வருகிறார்.

முன்னதாக நேற்று காலை, அஜித்குமாரின் சகோதரருக்கு அரசு வேலையும், குடும்பத்துக்கு இலவச வீட்டுமனை பட்டாவும் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் வழங்கினார்.

அஜித்குமாரின் தாயார், சகோதரர் ஆகியோரை நேற்று முன்தினம் முதல்வர் மு.க.ஸ்டாலின் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அவர்களிடம் தனது வருத்தத்தையும், ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்தார்.

இந்நிலையில் நேற்று முதல்வரின் உத்தரவுபடி, அஜித்குமார் தாயார் மாலதியை, அவரது வீட்டில் சந்தித்து ஆறுதல் கூறிய அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் 3 சென்ட் இலவச வீட்டு மனை பட்டா வழங்கினார். மேலும், அஜித்குமாரின் சகோதரர் நவீன்குமாருக்கு ஆவின் நிர்வாகத்தில் தொழில்நுட்பவியலாளர் பணிக்கான ஆணையும், தி.மு.க. சார்பில் 5 லட்சம் ரூபா நிதியையும் வழங்கியிருந்தார்.

# அடுத்த தலாய் லாமாவை தேர்வு செய்ய எங்களது ஒப்புதலை பெறுவது முக்கியம்

## சீன அரசு திட்டவட்டம்



அடுத்த தலாய் லாமாவை தேர்வு செய்வதற்கும், அங்கீகரிப்பதற்குமான பொறுப்பு காடன் போட்ராங் அறக்கட்டளை உறுப்பினர்களையே சாரும் என தலாய் லாமா இன்று அறிக்கை வெளியிட்ட நிலையில், அடுத்த தலாய் லாமாவை தேர்வு செய்யும் நடைமுறையில் தங்களது ஒப்புதலைப் பெறுவது முக்கியம் என்று சீன அரசு தெரிவித்துள்ளது.

இது குறித்து பீஜிங்கில் பேசிய சீன வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் மாவோ நிங்,

"தலாய் லாமா உள்ளிட்ட பவுத்த தலைவர்களை தேர்ந்தெடுக்கும் நடைமுறைகளுக்கு சீன அரசின் ஒப்புதலும் அங்கீகாரமும் அவசியம். 18 ஆம் நூற்றாண்டில் கிங் வம்ச பேரரசரால் அறிமுகப்படுத்தப்பட்ட தலாய் லாமா தேர்வு முறை பின்பற்றப்பட வேண்டும்.

திபெத்திய ஆன்மிகத் தலைவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான விதிகள் நடைமுறையில் உள்ளன. சுதந்திரமான மத நம்பிக்கை கொள்கையை சீன அரசு கடைப்பிடிக்கிறது. அதேநேரத்தில், மத விவகாரங்கள் மற்றும் திபெத்தில் வாழும் பவுத்தர்களின் பாரம்பரியத்தை நிர்வகிப்பதற்கான விதிமுறைகள் உள்ளன.

சீன மரபுகளுக்கு ஏற்ப மத நடைமுறைகளை வடிவமைக்கும் முயற்சி என்பது, அதன் கட்டுப்பாடு அல்ல. எந்தவொரு மதத்தின் வாழ்வும் வளர்ச்சியும் நாட்டின் சமூகச் சூழல் மற்றும் கலாச்சார மரபுகளுக்கு ஏற்ப மாற்றியமைப்பதில்தான் உள்ளது. திபெத்திய பவுத்தம் என்பது சீனாவில் பிறந்தது, சீன பண்புகளைக் கொண்டுள்ளது."

என்று தெரிவித்துள்ளார்.

முன்னதாக, இந்தியாவின் தரம்சாலாவில் தஞ்சமடைந்துள்ள 14 ஆவது தலாய் லாமா தனது 90 ஆவது பிறந்த நாளையொட்டி வெளியிட்ட அறிவிப்பில், 600 ஆண்டுகள் பழமையான தனது அறக்கட்டளை தனது மறைவுக்குப் பிறகும் தொடரும் என்றும் உரிய நடைமுறைகளின்படி, திபெத்திய புத்த மதத்தினருக்குத் தலைமை தாங்கும் அடுத்த தலாய் லாமா தேர்ந்தெடுக்கப்படுவார் என்றும் உறுதி செய்திருந்தார்.



# ஷேக் ஹசீனாவுக்கு சிறைத் தண்டனை

## சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தீர்ப்பு

பங்களாதேஷ் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவுக்கு 6 மாத சிறைத் தண்டனை விதித்து சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி உள்ளது.

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில், அவருக்கு இந்த தண்டனை வழங்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பங்களாதேஸில் மாணவர்கள் போராட்டம் காரணமாக பிரதமர் பதவியிலிருந்து விலகிய ஷேக் ஹசீனா, இந்தியாவில் தஞ்சம் புகுந்துள்ளார். அவர் மீது பல்வேறு வழக்குகள் தொடரப்பட்டு உள்ளன.

அந்த வழக்குகளில் அவர் முன்னிலையாக வேண்டும் என நீதிமன்றங்கள் உத்தரவு பிறப்பித்துள்ளன.

இதேவேளை, அவரை நாடு கடத்தும்படி முகமது யூனுஷ் தலைமையிலான இடைக்கால அரசு, இந்திய மத்திய அரசிடம் கோரிக்கை வைத்துள்ளது.

இந்நிலையில், நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் ஷேக் ஹசீனாவுக்கு 6 மாத சிறைத் தண்டனை வழங்கி, சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

பிரதமர் பதவியிலிருந்து ஹசீனா பதவி விலகி, 11 மாதங்கள் முடிந்த நிலையில் அவருக்கு வழங்கப்பட்ட முதல் தண்டனை இதுவாகும்.

# சோமாலியாவில் விமான விபத்து

## மூவர் பலி



சோமாலியாவில் ஆபிரிக்கா இராணுவத்திற்கு சொந்தமான சிறிய ரக வாகனம் ஒன்று விபத்துக்குள்ளானதில் மூவர் உயிரிழந்தனர். மேலும் நால்வர் காயமடைந்தனர்.

இந்த விபத்தில் விமானம் தீப்பிடித்து எரிந்ததாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

சோமாலியாவில் அல் – ஷாபாப் கிளர்ச்சிப்படையினருக்கு எதிரான உள்நாட்டுப் போரில், அரசுக்கு ஆதரவாக அமைதி காக்கும் பணியில் ஆப்பிரிக்க ஒன்றியத்தின் இராணுவம் ஈடுபட்டு வருகின்றது.

இந்த நிலையில், மொகடிஷ் நகரில் உள்ள விமான நிலையத்தில், சிறிய ரக விமானம் தரையிறங்கும் போது இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

மேற்படி விமானத்தில் 7 பேர் இருந்தனர் எனவும் ஏனையவர்கள் காயமடைந்த நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.



# இன்றைய ராசி பலன்கள் - 03.07.2025




எந்த ஒரு செயலையும் ஒன்றுக்கு இரண்டு தடவைகள் யோசித்துச் செயல்பட வேண்டும் உங்கள் வார்த்தைகளில் கவனம் தேவை. மனதில் குழப்பம் வேண்டாம். பிரார்த்தனை மூலம் வெற்றி கிடைக்கும்.

இன்று பணியில் வெற்றி காண்பது அரிது. பணியை குறித்த நேரத்தில் முடிக்க திட்டமிடல் அவசியம்.

மனக் குழப்பம் காரணமாக உறவின் நல்லிணக்கம் பாதிக்கும். காரணமேயில்லாமல் உங்கள் துணையுடன் சூடான விவாதங்கள் செய்ய நேரும்.

இன்று பண விரயம் காணப்படும்.செலவுகளை கட்டுப் படுத்த முடியாது. கவனமாக செலவு செய்ய வேண்டும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. பல் வலி காணப்படும். கண்களுக்கும் சிகிச்சை மேற்கொள்வது சிறந்தது.




இன்று சிறப்பாக நாளாக அமையும். கடினமான பணிகளைக் கூட எளிதாக செய்து முடிப்பீர்கள். சகஜமான அணுகு முறை மூலம் எளிதாக இலக்கை அடை யலாம்.

உங்கள் பணியில் சிறந்த வெற்றி பெறுவீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள். எந்த விஷ யத்தையும் புது முறையில் ஆற்றுவீர்கள்.

நீங்கள் உங்கள் துணையிடம் மகிழ்ச்சியான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதனால் இருவரி டையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

கணிசமான பண வரவின் காரணமாக இன்று மறக்க முடியாத நாளாக இருக்கும். பங்கு வர்த்தகத்தில் சேமிப்ப தன் மூலம் பணம் சம்பாதிக்கலாம்.




இன்று பொதுவாக மகிழ்ச்சி காணப்படும். நீங்கள் இன்றைய நாளை புதிய தொடர்புகள் ஏற்படுத்திக்கொள்ள பயன்படுத்தலாம். பொது நிகழ்ச்சிகள் மற்றும் விருந்துகளில் கலந்து கொள்வது மகிழ்ச்சியை அளிக்கும்.

பணியிடத்தில் உங்கள் திறமை மதிக்கப்படும். உங்கள் பணிகளை விரும்பி செய்வீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தும்.

உங்கள் துணையிடம் மனம் திறந்து பேசுவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று நிதிநிலைமையை சிறந்த முறையில் பரா மரிப்பீர்கள். பங்கு வர்த்தகத்தால் லாபமும் பயனும் அடைவீர்கள்.

ஆரோக்கியத்தைப் பொருத்தவரை இன்று சிறப்பான நாள். இன்று சிறந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.




வாக்குவாதங்கள் ஏற்படும் என்பதால் உரையாடுவதற்கு முன் கவனம் தேவை. சகஜமான அணுகுமுறை தேவை.

உங்கள் பணிகளை துல்லியமாகவும் தரத்துடனும் மேற்கொள்ள வேண்டும்.

உங்கள் துணையுடன் தகவல் பரிமாற்ற பிரச்சினை காணப்படும். நட்பான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. தேவையற்ற செலவினங்கள் காணப்படும்.

உங்கள் கண்களில் கவனம் செலுத்துங்கள். சளி, முதுகுவலி போன்ற உபாதைகள் ஏற்பட வாய்ப்புள்ளது. தியானம் மேற்கொள்வது சிறந்தது.




நீங்கள் அறிவுபூர்வமாக செயலாற் றுவதன் மூலம் இன்று எழும் பிரச்சினை களைக் கையாள இயலும்.இ ன்றைய நாள் சாதகமாக்கிக் கொள்வது உங்கள் கையில் தான் உள்ளது.

சிறப்பாக பணியாற்றுவதற்கு இன் றைய நாள் அனுகூலமாக இருக்காது. பணிகள் அதிக மாக இருக்கும் என்பதால் முறையாக திட்டமிடுவது அவசியம்.

நீங்கள் சிறிய விஷயத்தை கூட பெரிய அளவில் காண்பீர்கள். அதனை உங்கள் துணையிடம் வெளி-ப்படுத்துவீர்கள். மகிழ்ச்சியான போக்கு சிறந்தது.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். பொறுப்புகள் அதிகமாக காணப்படுவதால் கையில் பணம் குறைவாக காணப்படும்.




உங்கள் கடின முயற்சி மூலம் நீங்கள் வெற்றி காண்பீர்கள். நீங்கள் தன்னம் பிக்கையுடன் காணப்படுவீர்கள். முக்கிய முடிவுகள் நன்மை அளிக்கும்.

உங்கள் உறுதி மற்றும் நேர்மை காரணமாக உங்கள் பணிக்கு நல்ல பெயர் கிடைக்க வாய்ப்புள்ளது.

உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்து கொள் வீர்கள். இருவரும் பயனுள்ள விஷயங்களை கலந்து ஆலோசிப்பீர்கள்.

கடன்கள் மூலம் சில பண வரவு காணப்படும். இதன் மூலம் உங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வீர்கள்.

இன்று தேக ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும்.இந்த நேரத்தை நன்கு பயன்படுத்திக்கொள்ளுங்கள்




நம்பிக்கையும் மன உறுதியும் இன்று மிகவும் அவசியம். தைரியமின்மையால் பிரச்சினைகள் உருவாகும். எதிர்மறை எண்ணங்களை தவிர்க்க வேண்டும்.

பணிகளை மேற்கொள்ளும்போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. கவன முடம் பணியாற்ற வேண்டும்.

உங்கள் மனதில் குழப்பம் காணப்படும். இது கோப மாக வெளிப்படும். இதனை உங்கள் துணையிடம் வார்த் தையில் வெளிப்படுத்துவீர்கள். இதனால் உறவில் மகிழ்ச்சி பாதிப்படையும்.

இன்று தேவையற்ற செலவுகள் ஏற்படும். இதனால் உங்கள் பணச் சுமை அதிகரிக்கும்.

பதற்றம் காரணமாக கால் வலி ஏற்படும். உடற்பயிற்சி மூலம் ஆறுதல் பெறலாம்.




ஆன்மீக ஈடுபாடு ஆறுதல் அளிக் கும். புத்திசாலித்தனமாக யோசிப்பது சிறந்த பலனைத் தரும்.

இன்று பணியில் வளர்ச்சி காண உகந்த நாள் அல்ல. குறித்த நேரத்தில் பணிகளை முடிக்கும் உங்கள் திறமை-களைக் குறைக்கும் வகையில் சில தடைகள் ஏற்படும்.

நீங்கள் உங்கள் துணையுடன் மிகுந்த உணர்சி வசப்படுவீர்கள்.சகஜமான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. ஆன்மீக நோக்கத்திற்காக பணத்தை செலவு செய்வீர்கள்.

அதிக நீரைப் பருகி உங்களை ஆரோக்கிய மாக வைத்திருங்கள். இதனால் வயிற்று உப்பசம் சீராகும்.

# இன்றைய ராசி பலன்கள் - 03.07.2025




இன்றைய நாள் சுமூகமாகச் செல்லும். நண்பர்கள் மற்றும் நெருங்கிய வர்கள் உங்கள் மீது நம்பிக்கையுடன் இருப்பார்கள். இன்று நீங்கள் மகிழ்ச்சி யுடன் இருக்கலாம்.

பணியிடத்தில் உங்களுக்கு இனிமை யான ஆச்சரியங்கள் காத்திருக்கும். நீங்கள் உற்சா கத்துடன் பணியாற்றுவீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மூலம் பிரச்சினைகளை எளிதாக சமாளிக்கலாம். உங்கள் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

உங்களிடம் இருக்கும் பணம் உங்களுக்கு திருப்தி கரமாக இருக்கும். கிடைக்கும் பணத்தை சிறந்த முறை யில் பயன்படுத்துங்கள்.

உங்களின் மகிழ்ச்சியான மன நிலை காரணமாக தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று சற்று மந்தமான நிலை காணப்படும். ஆன்மீக ஈடுபாடு திருப் தியை அளிக்கும்.

இன்று புதிய பணி வாய்ப்புகள் உங்களுக்கு அதிக திருப்தியை அளிக் கும். சாதித்த உணர்வு ஏற்படும்.

உங்கள் துணையுடன் கலந்தாலோசிக்க இது ஏற்ற நாள். இதனால் உறவில் மகிழ்ச்சியும் நல்லிணக்க மும் காணப்படும்.

இன்று அதிக பண வரவு காணப்படும். ஊக்கத்தொகை வகையில் இன்று பண வரவைக் காணலாம்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று முழுவதும் நல்ல ஆரோக்கியத்தை பராமரிப்பீர் கள்.




எதிர்காலம் பற்றிய எண்ணங்கள் உங்கள் மனதில் ஓடும். இது அனைவரி டத்திலும் காணப்படும். முக்கியமான செயல்கள் செய்வதற்கு இன்று ஏற்ற நாள்.

பணிகளை எளிதாக மேற்கொள் வீர்கள். பணிகளை சுமூகமாகக் கையாள்வீர் கள்.

உங்கள் துணையுடன் நட்பான முறையில் நடந்து கொள்வீர்கள். இதனால் உறவின் பிணைப்பு வலுப்படும்.

இன்று நிதிநிலைமை ஸ்திரமாக இருக்கும். திருப்திகரமான நிலை காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். மகிழ்ச்சி நிலவும்.




இன்று சாதகமான பலன்கள் கிடைக்காது. சில சூழ்நிலைகள் உங்களுக்கு வருத்தத்தை உருவாக் கும். மகிழ்ச்சியாக இருக்க முயலவும். பிரார்த்தனை மற்றும் வழிபாடு ஆறுதலை அளிக்கும்.

பணியிடத்தில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் பணிகளை கவனமாக ஆற்ற வேண்டும்.

இன்று உங்கள் மகிழ்ச்சியாக இருப்பதற்கு ஏற்ற நாள் அல்ல. எனவே எந்த விஷயத்தையும் எளிதாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். உங்கள் தேவைகளை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள். உங்கள் தேவைகளுக்கு கடன் கூட வாங்குவீர்கள்.

சனி சம்பந்தமான பிரச்சினைகளால் பாதிப்பு காணப்படும். பிரார்த்தனை மேற்கொள்வது சிறந்தது.



# நெல் கொள்வனவு இன்று ஆரம்பம்

சிறுபோகத்திற்கான நெல் கொள் வனவு இன்று முதல் ஆரம்பிக்கப் படவுள்ளது.

நாட்டரிசி நெல் 1 கிலோகிராம் 120 ரூபாவிற்கும் சம்பா நெல் 1 கிலோ கிராம் 125 ரூபாவிற்கும் கீரிசம்பா நெல் 1 கிலோகிராம் 132 ரூபாவிற்கும் கொள்வனவு செய்வதற்கு நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் மஞ்சுள பின்னலந்த தெரிவித்துள் ளார்.

இதற்காக கடந்த வரவு செலவுத் திட்டத்தில் 06 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அம்பாறை, முல்லைத்தீவு மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் நெல் அறுவடை ஏற்கனவே ஆரம்பிக்கப் பட்டுள்ளதாக நெல் சந்தைப்படுத்தல் சபை குறிப்பிட்டுள்ளது.

முதற்கட்டமாக இந்த மாவட்டங் களுக்கான நெற்கொள்வனவை ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நெல் சந்தைப்படுத்தல் சபை மேலும் தெரிவித்துள்ளது.